# முஸ்லிம் திருமணத்தில் மஹர் நடைமுறை: பாலமுனை 2 ஆம் பிரதேசத்தை மையப்படுத்தியதோர் ஆய்வு

# Mahar in Muslim Marriage: A Research Based on Palamunai -02

I. Saujan[1], MS. Ismiya Begum[2]

[1,2] Department of Islamic Studies, Faculty of Islamic Studies and Arabic Language,
South Eastern University of Sri Lanka.
saujaniqbal95@gmail.com, ismiyams@seu.ac.lk

**ஆய்வுச் சுருக்கம்**

இஸ்லாத்தில் திருமண ஒப்பந்தம் நிறைவேறுவதற்கான ஓர் அடிப்படை அம்சமாக மஹர் காணப்படுகின்றது. இது குறித்த இஸ்லாத்தின் போதனைகள் முஸ்லிம் உம்மத்திற்கான பொதுக் கோட்பாடாக இருப்பினும் மஹருடன் தொடர்பான இஸ்லாமிய நியமங்கள் பற்றிய புரிதலின்மையும், தாம் வாழும் நாடுகளின் பிற சமூக கலாசாரங்களின் தாக்கங்களும் இஸ்லாமிய கோட்பாடுகளையும் நடைமுறைகளையும் பின்பற்றுவதில் முஸ்லிம்கள் மத்தியில் பிறழ்வுகளை ஏற்படுத்தியுள்ளன. இப்பிரச்சினையை அடிப்படையாகக் கொண்டு அம்பாறை மாவட்டதில் அமைந்துள்ள பாலமுனை-2ம் பிரதேச முஸ்லிம்களின் திருமணத்தில் உள்ள மஹர் நடைமுறையை இஸ்லாமிய நியமங்களுடன் ஒப்பிட்டு விளக்குவதனை ஆய்வின் நோக்கமாகக் கொண்டு இவ்வாய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வானது ஒரு பண்புசார் ஆய்வாக அமைந்துள்ளதுடன் இவ்வாய்வுக்காக வினாக் கொத்து, நேர்காணல் மற்றும் குழுக்கலந்துரையாடல் போன்ற முதலாம் நிலைத் தரவு மூலங்களிலிருந்தும் ஆய்வுடன் தொடர்பான அறிக்கைகள், நூற்கள், ஆய்வுக்கட்டுரைகள், சஞ்சிகைகள் போன்ற இரண்டாம் நிலைத் தரவு மூலங்களிலிருந்தும் தகவல்கள் திரட்டப்பட்டுள்ளன. முதலாம் நிலைத் தரவு மூலங்களைக் கொண்டு பெறப்பட்ட தகவல்கள் SPSS மென்பொருளின் துணையுடன் பகுப்பாய்வு செய்யப்பட்டு விபரணப் புள்ளி விபரவியல் முறை மூலம் விளக்கப்பட்டுள்ளன. இவ்வாய்வின் மூலம் மஹரில் பெண்ணின் உரிமை, அதன் அளவு, மஹர் வழங்கப்படும் முறை, வழங்கப்படும் பொருள் போன்றவற்றில் இஸ்லாத்தின் மஹர் தொடர்பான கோட்பாட்டிற்கு மாற்றமான நடைமுறை அம்சங்கள் இழையோடியுள்ளன என்பது கண்டறியப்பட்டுள்ளது.

**திறவுச் சொற்கள்:** பாலமுனை, மஹர், திருமணம், முஸ்லிம்கள்

## அறிமுகம் (Introduction)

வலிதான இஸ்லாமிய திருமணம் ஒன்றின் அடிப்படையாக மஹர் அமைந்துள்ளது. மஹர் என்பது "திருமணத்தின் நிமித்தம் மணமகன் மணமகளை கண்ணியப்படுத்தும் வகையில் கட்டாயமாக வழங்க வேண்டியதோர் அன்பளிப்பாகும்".(Natchia v pitche, 1911) இஸ்லாமிய வரலாற்றில் திருமண நடைமுறைகள் இஸ்லாமிய நியமங்களை அடிப்படையாகக் கொண்ட மஹர் நடைமுறைகள் இருந்து வந்துள்ளன. இஸ்லாத்தின் பரவலுடன் பிற நாகரிகங்களுடனான இஸ்லாமிய நாகரிகத்தின் தொடர்புகள் முஸ்லிம்களின் அடிப்படை நம்பிக்கைகளில் மாற்றங்களை ஏற்படுத்தாத போதும் அவர்களின் மரபுகள், சடங்குகள், சம்பிரதாயங்கள் போன்றவற்றில் மாற்றங்களை தோற்றுவித்துள்ளன. குறிப்பாக பல்லின சமூகத்தில் இணைந்து வாழும் சிறுபான்மை முஸ்லிம்களின் நடைமுறைகளில் இவற்றின் பிரதிபலிப்புக்களை அவதானிக்கலாம். இந்த அடிப்படையில் இலங்கை வாழ் முஸ்லிம்கள் பல்லின சமூகங்களுக்கு மத்தியில் இணைந்து வாழ்ந்த போதிலும் இஸ்லாத்தின் அடிப்படை நம்பிக்கைகளில் ஒருமைப்பாட்டையும் பொதுப்பண்பையும் எப்போதும் பின்பற்றிவந்துள்ளதுடன் தமது கலாசார தனித்துவங்களை காத்தும் வந்துள்ளனர். இந்த அடிப்படையில்தான் முஸ்லிம் தனியார் சட்டம் உருவாக்கப்பட்டு தமது விவாக, விவாகரத்து நடைமுறைகளை அவர்கள் மேற்கொண்டு வந்துள்ளனர். தாம் வாழும் சுதேச கலாசார செல்வாக்கிற்கு உட்பட்ட விடயங்களில் திருமண நடைமுறைகளில் ஏற்பட்ட தாக்கங்களும் முக்கியமானவை. அந்த அடிப்படையில் முஸ்லிம்களின் திருமண நடைமுறைகளில் பிரதான கூறாக மஹர் வழங்குதல் இருந்துள்ளது. இவற்றில் இஸ்லாமிய நியமங்கள் இருந்துள்ள போதிலும் இஸ்லாமிய நியமங்களுக்கு மாற்றமான மரபுகளும் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்துள்ளன. இஸ்லாமிய கோட்பாடுகள் சிந்தனைகள் பற்றிய

தெளிவுகள் பலகோணங்களிலும் தெளிவுபடுத்தப்பட்டு வரும் இன்றைய காலகட்டத்திலும் முஸ்லிம்கள் பாரம்பரிய நடைமுறைகளையும் இஸ்லாமிய நியமங்களுக்கு அப்பாற்பட்ட விடயங்களையும் தமது திருமண நடைமுறைகளில் பின்பற்றி வருவது இஸ்லாத்தின் நடைமுறைகளை பின்பற்றி வருவதில் முஸ்லிம் சமூகத்தின் பின்னடைவுகளை பிரதிபலிக்கின்றன. ஆய்வுப்பிரதேச முஸ்லிம்களின் நடைமுறைகளிலும் இது பொதுவான தோற்றப்பாடாக இருந்து வந்துள்ளது. இப்பிரச்சினையை அடிப்படையாகக் கொண்டு முஸ்லிம்களின் திருமணத்தில் மஹர் நடைமுறைகளில் இஸ்லாமிய நியமங்கள் பின்பற்றப்பட்டு வந்துள்ள அதே நேரம் சுதேச மரபுகளும் வழக்கில் இருந்துள்ளன எனும் கருதுகோளை இவ்வாய்வு பரீட்சிக்க முனைகின்றது. முஸ்லிம்களின் திருமணத்தில் மஹர் நடைமுறையை இஸ்லாமிய நியமங்களோடு ஒப்பிட்டு விளக்குவதனை இவ்வாய்வு பிரதான நோக்கமாகக் கொண்டமைந்துள்ளது.

மஹர் நடைமுறைகள் அன்பளிப்புக்கள் தொடர்பாக நடைமுறையில் காணப்படும் சிக்கல்களையும், அவை குறித்த இஸ்லாமிய கோட்பாட்டுத் தெளிவையும், இஸ்லாம் பெண்ணுக்கு மஹர் மூலம் வழங்கியுள்ள சமத்துவம் மற்றும் குடும்ப வாழ்வில் உடல், உள, ரீதியாக அவை ஏற்படுத்தும் தாக்கங்கள், தாமதித்த மஹர் நடைமுறை போன்ற பிரச்சினைகளை மையப்படுத்தியதாக பல ஆய்வுகள் இடம் பெற்றுள்ளன. அவற்றுள் "முஸ்லிம் திருமணத்தில் மஹரும், அன்பளிப்பும்: கல்முனைக்குடி பிரதேசத்தை மையப்படுத்திய ஆய்வு" என்ற ஆய்வானது Dr.Jazeel, MI.Rinosa ஆகியோர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. குறித்த ஆய்வானது கோட்பாட்டுரீதியில் இவ்வாய்வுடன் இயைந்து சென்றாலும் நோக்கம் ஆய்வுப்பிரதேசம் என்பவற்றின் அடிப்படையில் வேறுபடுகின்றது. இவைதவிர இடம்பெற்றுள்ள பெரும்பாலான ஆய்வுகள் கோட்பாட்டு ரீதியானதாக அமைந்துள்ளன. இருப்பினும் இவ்வாய்வானது இலங்கை வாழ் முஸ்லிம்களின் திருமணத்தில் மஹர் நடைமுறையை இஸ்லாமிய நியமங்களோடு ஒப்பிட்டு விளக்கும் அதன் நோக்கத்திலும் குறிப்பிட்டதோர் பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்ட கள ஆய்வாக இருப்பதிலும் முக்கியத்துவம் பெறுகின்றது. ஆய்வுப்பிரதேசத்தில் இது தொடர்பான ஆய்வுகள் இதற்கு முன்னர் மேற்கொள்ளப்படவில்லை என்ற ஆய்வு இடைவெளியைப் பூரணப்படுத்துவதில் குறித்த ஆய்வு சிறப்பிடம் பெறுகின்றது.

### ஆய்வின் நோக்கம் (Objectives of Study)

1. பாலமுனை-2ம் பிரதேச முஸ்லிம்களின் திருமணத்தில் மஹர் நடைமுறைகளின் பிரதான அம்சங்கள் குறித்து ஆராய்தல்
2. குறித்த பிரதேச முஸ்லிம்களின் திருமணத்தில் மஹர் நடைமுறையை இஸ்லாமிய நியமங்களோடு ஒப்பிட்டு விளக்குதல்

### ஆய்வுப்பிரச்சினை (Research Problem)

- ✓ இஸ்லாம் கூறுகின்ற தூய மஹர் நடைமுறை ஆய்வுப்பிரதேசத்தில் காணப்படாமை.

### ஆய்வின் எல்லை (Limitation)

- ✓ தலைப்பு எல்லை: பாலமுனைப்பிரதேச முஸ்லிம்களது திருமணத்தில் மஹர் நடைமுறை.
- ✓ பிரதேச எல்லை: பாலமுனை 2ம் பிரிவு.
- ✓ ஆள் எல்லை: பாலமுனை 2ம் பிரிவில் திருமணமான ஆண்கள், பெண்கள்.

### ஆய்வு முறையியலும் தகவல் சேகரிப்பும் (Research Methodology & Datsa Collection )

பாலமுனை 2ம் பிரிவின் முஸ்லிம்களின் மஹர் நடைமுறை பற்றிய ஆய்வானது பண்புசார் முறையினை பயன்படுத்திய ஓர் விபரிப்பு ஆய்வாகும். இவ்வாய்வானது ஒரு கள ஆய்வாக இருப்பதனால் இவ்வாய்வினை நேர்த்தியாக பூரணப்படுத்தும் வகையில் முதலாம் நிலைத் தரவுகளும், இரண்டாம் நிலைத் தரவுகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

1.முதலாம் நிலைத் தரவுகள்

வினாக்கொத்து, நேர்காணல்.

பிரதேச தகவல் திரட்டின் போது R.Kaejcie மற்றும் D.Morgan ஆகியோரின் மாதரி எடுப்பு சமன்பாட்டு முறைக்கு அமைவாக தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன.[47] ஆய்வுப்பிரதேசத்தில் உள்ள 478 குடும்பங்களில் (847 நபர்கள்)[48] இருந்து ஆய்வு மாதிரியாக திருமணமான ஆண்கள், பெண்கள் உள்ளடங்களாக 250 நபர்கள் தெரிவு செய்யப்பட்டு வினாக்கொத்து மூலம் தகவல்கள் திரட்டப்பட்டன. இவற்றிக்கு மேலதிக பிரதேசத்தின் பள்ளிவாயல் நிர்வாகம், கல்விமான்கள், அரபுக்கல்லூரியின் ஆசிரியர்கள், சமூக அமைப்புக்களின் உறுப்பினர்கள் போன்ற 14 நபர்களுடன் நேர்கானல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2.இரண்டாம் நிலைத் தரவுகள்

குறித்த பிரதேசத்தின் திருமணப்பதிவாளரிடமிருந்தும், பிரதேச பள்ளி நிர்வாகிகளிடமிருந்தும் திருமணப்பதிவுகள் பெறப்பட்டு ஒன்பது வருடங்களாக இடம்பெற்ற திருமணத்தில் மஹர் நடைமுறைகள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டது. இதற்கு மேலதிகமாக ஆய்வுக்கட்டுரைகள், நூற்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் போன்ற வற்றின் தகவல்கள் வாசிப்புக்குட்படுத்தப்பட்டது. திரட்டப்பட்டு தகவல்கள் கணணி மென்பொருட்களான SPSS மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டு Ms- Excel மூலம் வரைபுகள் காட்டப்பட்டுள்ளன.

## பெறுபேறுகளும் கலந்துரையாடலும் (Result and Discussion)

ஆய்வுப்பிரதேச முஸ்லிம்களின் திருமணத்தில் மஹர் நடைமுறை அம்சங்கள் குறித்தும் அவற்றில் பின்பற்றப்பட்டுள்ள இஸ்லாமிய நியமங்கள் குறித்தும் ஆராய்ந்த போது பின்வரும் பெறுபேறுகள் கிடைக்கபெற்றன. அந்த அடிப்படையில் 2010-2019 இடைப்பட்ட காலப்பகுதியில் சுமார் 89 திருமணங்கள் இடம்பெற்றுள்ளன. இதனை பின்வரும் அட்டவணையும் வரைபடமும் காட்டுகின்றன.(வயடிடந:1இ குபைநச:1 )

இத்திருமணங்களில் திருமணப்பதிவு, மஹர் நிர்ணயம், உடனடி மற்றும் தாமதிக்கப்பட்ட மஹர், மஹர் மிஸ்ல், மஹரின் அளவு, சீதனம் போன்ற பிரதான அம்சங்களாக இருந்துள்ளன. இவற்றுள் சில இஸ்லாமிய நியமங்களுக்குட்பட்டும் மேலும் சில முஸ்லிம்களின் மரபுகளையும் கொண்டமைந்துள்ளன.

### 1. திருமணப் பதிவு (Marriage Registration)

Table 1. திருமணங்களின் விபரம்.

| ஆண்டு | இடம்பெற்ற திருமணங்கள் எ.கை | வீதத்தில் |
|---|---|---|
| 2019-2018 | 15 | 17% |
| 2018-2017 | 08 | 9% |
| 2017-2016 | 15 | 17% |
| 2016-2015 | 11 | 13% |
| 2015-2014 | 05 | 5% |

[47] Robert v.krejcie & Daryle W.Krejcie, "Determining Sample Size for Research Activities"

[48] பிரதேச செயலகம், அட்டாளைச்சேனை 2018.

| | | |
|---|---|---|
| 2014-2013 | 08 | 9% |
| 2013-2012 | 08 | 9% |
| 2012-2011 | 08 | 10% |
| 2011-2010 | 10 | 11% |
| **Total** | **89** | **100%** |

இஸ்லாமிய சட்டவியலில் ஒரு வலிதான திருமணத்தின் தேவைப்பாடாக பதிவு அமையாத போதிலும்[49] இலங்கை முஸ்லிம் தனியார் சட்டத்தின் திருமண விவாகரத்து சட்டம் இலக்கம்-13, 1951 இன் ஏற்பாட்டிற்கு அமைவாக முஸ்லிம் ஒருவர் வலிதான திருமண ஒப்பந்தம் ஒன்றில் நுழைவதற்கான அடிப்படைத் தேவைப்பாடுகளையும் திருமணப்பதிவின் அவசியத்தையும் வேண்டி நிற்கின்றது.[50] இதற்கமைய இலங்கை வாழ் முஸ்லிம்களின் திருமணம் அரசின் கீழ் பதிவு செய்யப்பட்டு வருகின்றது. இதற்கு மேலதிகமாக திருமணத் தொடர்பான எதிர்கால முரன்பாடுகளைத் தவிர்ப்பதற்காக பிரதேச பள்ளிவாயல் நிர்வாக சபையினால் தனியான பதிவேடு பேணப்பட்டு வருகின்றது. ஆய்வுப்பிரதேசமான பாலமுனை 2ம் பிரிவில் இடம்பெற்ற திருமணங்கள் தொடர்பான பகுப்பாய்விற்கு திருமணப்பதிவாளரிடம் இருந்து திருமணப்பதிவு பெறப்பட்டதுடன் பெறப்பட்ட பதிவேடு பள்ளி நிர்வாக சபையின் பதிவேட்டுடன் ஒப்புநோக்கிய போது கடந்த 9 வருடங்களாக நடைபெற்ற திருமணங்களே இரு பதிவேடுகளிலும் ஒத்துப்போவதனை அவதானிக்க முடிந்தது. இதற்குக் காரணம் பள்ளி நிர்வாகம் கடந்த 9வருடங்களாகவே பதிவேட்டினை பின்பற்றுவதாக தெரியவந்தது. இது ஆய்வுப்பிரதேசத்தில் திருமணப்பதிவு தொடர்பாக பின்பற்றப்படுகின்ற முன்னேற்றமான நடைமுறையாகும். பெறப்பட்ட 9வருடங்களுக்கான தரவுகளும் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.




Fig. 1: The Frequency of Marriage

ஆய்வுப் பிரதேசத்தில் திரட்டப்பட்ட தரவுகளுக்கேற்ப ஒன்பது வருடங்களிலும் மொத்தமாக 89 திருமணங்கள் இடம் பெற்றுள்ளன (Table1: திருமணங்களின் விபரம்.) இவ்வனைத்துத் திருமணங்களும் முஸ்லிம் திருமண விவாகரத்து சட்டம் இலக்கம்-13, 1951 இன் ஏற்பாட்பாடிற்கு அமைவாக முஸ்லிம் ஒருவர் வலிதான திருமண ஒப்பந்தம் ஒன்றில் நுழைவதற்கான அடிப்படைத் தேவைப்பாடுகள் அணைத்தையும் பூரணமாக பின்பற்றப்பட்டுள்ளதனை அவதானிக்க முடிந்தது. இடம்பெற்ற திருமணங்களில் அதிகமானவை 2019-2018 (15) மற்றும் 2017-2016 (15) போன்ற இடைப்பட்ட காலங்களில் இடம் பெற்றவையாகும். குறைந்த எண்ணிக்கையான திருமணங்கள் 2015-2014 (5) இடைப்பட்ட காலங்களில் இடம் பெற்றுள்ளது இதனை Fig. 1: The Frequency of Marriage இல் அவதானிக்க முடியும்.

### 2. மஹர் வழங்குதல் (Convey Dower)

மஹர் என்பது இஸ்லாம் வலியுறுத்திக் கூறிய விடயமாகும். நிகாஹில் மஹரை குறிப்பது சுன்னத்தாகும். குறிக்கப்பட்ட மஹ்ரை கொடுப்பது வாஜிபாகும்.[51] “மணம் முடிக்கும் மணப்பெண்ணுக்குரிய (மஹர்) தொகையை முறைப்படி கொடுத்து விடுங்கள்.” (ஸூரத்துன்னிஸா:24,25) மேலும் பின்பாஸ் போன்ற அறிஞர்களின் கருத்துப்படி திருமணத்தில் மஹர் “வாஜிப்” ஆகும்.[52] மஹரின் மூலம் பெண்ணின் உரிமை பாதுகாக்கப்படுகின்றது. மஹர் வழங்கப்படாது இடம் பெறும் திருமணம் தம்பதியினரை விபச்சாரத்தில் நுழைத்துவிடும் “மஹர் கொடுக்கப்பட்ட பெண்கள்தான் ஹலால் சட்ட ஒழுங்குகளின் படி

[49]மன்ஸூர் எம்.ஏ.எம், மஸ்லிம் தனியார் சட்டம் சில அவதானங்கள். பக்-10
[50] றியாந்தினி.க, இலங்கை திருமணம் தொடர்பான சட்டங்களில் முஸ்லிம் தனியார் சட்டத்தின் வகிபங்கு
[51] Sufi manzil,(2009)
[52] அப்துல் லதீப். 2009. பக்:18

நுகர அனுமதிக்கப்பட்டவர்கள்'' (ஸூரா அஹ்ஸாப்:50) இதற்கு மாற்றமாக இலங்கை முஸ்லிம் தனியார் சட்டத்தின் 1951, 13ம் இலக்க சட்டப் படி ஒரு முஸ்லிம் திருமணத்தில் மஹர் கொடுக்கப்படவில்லை என்ற காரனத்தினால் திருமணம் வலிதற்றதாக மாறாது என குறிப்பிடப்பட்டுள்ளமை மஹரின்றிய திருமணம் சட்டத்தினால் அங்கீகரிக்கப்படும் என்பதும் இங்கு கருத்தில் கொள்ளதக்கது.[53]

இருந்தபோதிலும் ஆய்வு பிரதேசத்தினை பொறுத்தவரையில் மஹர் கொடுக்காது எந்த திருமணமும் இடம்பெற்றதாக தெரியவில்லை. எனவே இந்நடைமுறை இஸ்லாமிய நியமங்களுடன் இசைந்து செல்கின்றது.

### 3. மஹர் நிர்ணயம் (Determination of Dower (Mahar)




Fig. 2: Determination of Mahar

''மணம் முடிக்கும் பெண்ணுக்கு ஒரு பொற்குவியலையே (மஹராக) கொடுத்த போதிலும், அதிலிருந்து எதனையும் (திரும்ப) எடுத்துக் கொள்ளாதீர்கள்.'' (ஸூரத்துன்னிஸா: 20) மஹரினை நிர்ணயம் செய்கின்ற விடயத்தில் பெண்ணின் உரிமை நடைமுறைப்படுத்தப் பட்டதா? என்றால் அது தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டதாகவே காணப்படுகின்றது. இங்கு மஹர் தொகையானது பெண்ணின் அழகு, கல்வி நிலை, பரம்பரை, சொத்து செல்வம் என்பவற்றை கருத்தில் கொண்டு பெரும்பாலும் மணமகனின் தந்தையால் நிர்ணயிக்கப்படுகின்றமையை அவதானிக்க முடிந்தது. மேலும் மஹர் தொகையானது மணமகனுக்கு வழங்கப்படும் சீதனத்தில் தங்கியுள்ளமையை அவதானிக்க முடிந்தது. மணமகனுக்கு வழங்கப்படும் சீதனத்தின் பெறுமதி உயர்வாக இருக்கும் போது மஹர் தொகையும் உயர்வாகவே அமையும் இது பிரதேசத்தின் வழக்காறாக பின்பற்றப்பட்டு வருகின்றது. வரைபினை அவதானிக்கும் போது ஆய்வுப்பிரதேசத்தில் இடம்பெற்ற 89 திருமணங்களிலும் 71% ஆன திருமணத்தில் மஹரினை மணமகனின் தந்தை நிர்ணயம் செய்துள்ளமையை அவதானிக்க முடியும். (வினாக்கொத்து)
மஹர் தொகையினை நிர்ணயம் செய்யும் உரிமையை பெண்ணுக்கு இஸ்லாம் வழங்கியுள்ளதுடன் சீதனத்தினை முற்றாக தடை செய்கின்றது. ஒரு மணப்பெண் ஒரு பொற்குவியலைக் கூட தனக்கு மஹராக கேட்க உரிமையுண்டு. என அல் குர்ஆன் பிரஸ்தாபிக்கின்றது. (ஸூரத்துன்னிஸா: 20)

### 4. உடனடி மஹர் மற்றும் தாமதிக்கப்பட்ட மஹர் (Prompt Dower and Deffed Dower)

இரு வகையான மஹர்கள் இஸ்லாமிய சட்டவியலில் காணப்படுகின்றது.
1) கணவன்-மனைவி இல்லற இன்பத்தை துவக்குவதற்கு முன்பே வழங்கப்படுவது. இது ''மஹர் முஅஜ்ஜல் (مهر معجل )எனப்படும்.
2) மஹர் முவஜ்ஜல் (مهر مؤجل) திருமணத்திற்குப்பின் வழங்கப்படுவது.




Fig. 3: Prompt Dower and Deffed Dower

ஆய்வுப்பிரதேசத்தில் இவ்விரு வகையான மஹர்களும் நடைமுறையில் காணக்கூடியதாக இருந்தது (Fig.3: Prompt Dower and Deffed Dower). திருமண உடன்படிக்கை நிகழும் போது சிறிய தொகையை (உடனடி மஹராக) திருமண உடன் படிக்கையின் பிறகு பெறும் தொகையை (தாமதிக்கப்பட்ட மஹராக) வழங்கு வதாக திருமணப் பதிவில் எழுதப்படுகின்றது. இருப்பினும் பெண் வாழும் காலத்தில் குறித்த மஹர் வழங்கப்பட்டதா? இல்லையா? என்பது கவணத்தில் கொள்ளப்படாத நிலை காணப்பட்டதுடன் அது வழங்கப்பட்டதற்கான

[53] சூளனி கொடிக்கார,1999,பக்:43

எழுத்து மூலமான ஆவணங்கள் எதனையும் காண முடியவில்லை. (நோர்கானல்) இது மஹர்தொடர்பான பெண்ணின் உரிமையினை மறைமுகமாக பறிக்கும் செயலாகும். இது ஆய்வுப்பிரதேசத்தில் இடம்பெற்ற திருமணங்களில் 87% ஆன திருமணங்களில் அவதானிக்க முடிந்தது. உலகில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற நாடுகளில் பெண்களின் மஹர் உரிமை தொடர்பான பல முன்னேற்றகரமான சட்டங்கள் நடைமுறையிலுள்ள தற்காலத்தில் ஆய்வுப்பிரதேசத்தின் நிலை பெண்கள் உரிமை பறிக்கப்பட்டதாக உள்ளதுடன் திருமணப் பரிவின் போது தாமதிக்கப்பட்ட மஹர் தொகையினை பெறுவதற்காக அதிகமான பெண்கள் காழி நீதி மன்றங்களை நாடிச்செல்வதாக நேர்காணலின் மூலம் அறிய முடிந்தது.

### 5. மஹர் மிஸ்ல் (Similar Dower)

மஹர் என்பது திருமண ஒப்பந்தத்தை முன்னிட்டு மனைவிக்கு (மணமகன் சார்பாக) வழங்கப்படுகின்ற பணமோ, பொருளோ ஆகும். அது குறைவாக இருந்தாலும் கூடுதலாக இருந்தாலும் சரியே மஹரின் அளவு இவ்வளவுதான் என குறிப்பிடாமல் இருந்தாலும் (மஹர் எதுவும் கொடுக்கப்படாமல் திருமணம் நடைபெறுவது போன்று அல்லது இவ்வளவு என்று குறிப்பிடாமல் திருமணம் நடைபெறுவது போன்று) இடம் பெற்றால் அப்போது ஊர்வழக்கில் உள்ள மஹரை (மஹர் மிஸ்ல்) வழங்குவது கடமையாகும்.[54] ஆய்வுப்பிரதேசத்தின் மஹர் மிஸ்லாக 100,000 ரூபாய் (பனமாக), 16பவுன் நகையாக உள்ளமையை தரவுத் திரட்டலின் போது அவதானிக்க முடிந்தது. மஹர் மிஸ்ல் தொடர்பாக தெளிவான சட்ட ஆதாரங்கள் எதுவும் இல்லாதிருப்பினும் நடைமுறையில் தோன்றும் சில முரண்பாடுகளை தவிர்ப்பதற்காக இதனை பயன்படுத்த முடியும் என்பதில் மத்ஹபுகளுடைய அறிஞர்கள் ஏகோபித்த கருத்தில் உள்ளனர்.[55]

### 6. மஹரின் அளவு (Amount of Dower)

மஹராக என்ன அல்லது எவ்வளவு வழங்கப்பட வேண்டுமென்பது பற்றி அல் குர்ஆன் தெளிவாக குறிப்பிடாத போதிலும் ஹதீஸானது கணவனின் அந்தஸ்திற்கும் மனைவியின் அந்தஸ்திற்குமேற்ற வகையில், நியாயமான தொகையாக அமைய வேண்டுமென்று தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது. ''ஒரு நபித் தோழரிடம் மஹராகக் கொடுக்க எந்த பொருளும் இல்லாததை அறிந்த ரசூல் (ஸல்) அவர்கள் “உங்களுக்கு ஏதாவது திருக்குர்ஆன் வசனங்கள் தெரியுமா? எனக் கேட்டார்கள். அந்நபித்தோழர், தனக்கு சில குர்ஆனிய வசனங்கள் தெரியுமென விடையளித்தார்கள். உடனே அந்த வசனங்களை மணப்பெண்ணுக்கு கற்றுக் கொடுப்பாயாக! இதுவே அப்பெண்ணுக்குரிய மஹராகும்'' என்றார்கள். (அறிவிப்பு: ஸஹல் பின் ஸஅத் (ரலி) ஆதாரங்கள்: புகாரி, முஸ்லிம், அபூதாவுத், நஸயீ, தாரமி, திர்மிதி) இன்று முஸ்லிம் நாடுகளின் நடைமுறையிலுள்ள சட்டத்தின் பிரகாரம் ஹன.்.பி -10 திர்ஹம், மாலிகி -3 திர்ஹம், அஸ் ஷாபிஈ மற்றும் ஷீயா- குறைந்த அளவு கிடையாது. (ஒரு திர்ஹம் என்பது 2.97 கிராம் வெள்ளியின் அளவு எனக்கொள்ளலாம்)[56]. இஸ்லாம் ஒரு பெண்ணைக் கண்ணியப்படுத்துவதற்காக மஹர் எவ்வளவு வேண்டுமானாலும் கொடுக்கலாம் என்கிறது அது ஒரு தங்கப் புதையலாகவும் இருக்கலாம் என்பது குர்ஆனின் கருத்தாகும். ஆயினும் அது மஹரின் அதிபட்ச அளவை நிரணயிக்கவில்லை.

''பொற்குவியலையே மஹராகக் கொடுத்தாலும் அதிலிருந்து எதனையும் திரும்பி எடுத்துக் கொள்ளாதீர்கள்''(ஸூரத்துன்னிஸா:20,21)

''பெண்களுக்கு அவர்களின் மணக் கொடையைக் கட்டாயமாகக் கொடுத்து விடுங்கள் அவர்களாக மனமுவந்து அதில் எதையேனும் விட்டுத் தந்தால் மனநிறைவுடனும் மகிழ்வுடனும் அதை உண்ணுங்கள்'' (ஸூராத்துன்னிஸா:4) அந்தவகையில் ஆய்வுப்பிரதேசத்தில் உள்ள மஹரின் அளவானது பணமாக 10,000 தொடக்கம் 100,000 வரையிலும் தங்கமாக 8பவுன் தொடக்கம் 16பவுனுக்கு இடைப்பட்டதாக காணப்படுகின்றது.

### 7. மஹராக வழங்கப்படும் பொருட்கள் (Goods offered as Dower)

ஒரு நபித் தோழரிடம் மஹராகக் கொடுக்க எந்த பொருளும் இல்லாததை அறிந்த ரசூல் (ஸல்) அவர்கள் “உங்களுக்கு ஏதாவது திருக்குர்ஆன் வசனங்கள் தெரியுமா? எனக் கேட்டார்கள். அந்நபித்தோழர், தனக்கு சில குர்ஆன் வசனங்கள் தெரியுமென

---

[54] الزواج لفضيلة الشيخ محمد بن صالح رحمه الله تعالئ رقم صفحة 4

[55] Siddiqi.M.I,(1994). “Family Law of Islam”, pg-80.

[56] Mohamed Marmaduke Pickthall, Sunday, April 3, 2011

விடையளித்தார். உடனே அந்த வசனங்களை மணப் பெண்ணுக்கு கற்றுக் கொடுப்பாயாக! இதுவே அப்பெண்ணுக்குரிய மஹராகும்'' என்றார்கள்.[57]

“நபி (ஸல்) அவர்கள் வாழ்ந்த போது, அப்துர் ரஹ்மான் பின் அவ்.்.ப் (ரலி) என்ற நபித்தோழர் பேரித்தம் பழமளவு தங்கத்தை மஹராகக் கொடுத்து ஒரு மதீனத்து பெண்ணை மண முடித்தார்கள்.''[58]

நபிகளாரின் அருமை மகள் ∴பாத்திமா (ரலி) அவர்களின் திருமணத்தின்போது 500 திர்ஹம் மஹர் என நிர்ணயித்தார்கள்.

மஹரானது தங்கக் களஞ்சிகளாக அல்லது அதற்குச் சமமான பணமாத் திருமணத்தின் போது அல்லது திருமணத்தின் பின்னர் வழங்கப்படுவது கிழக்கிலங்கையின் வழக்கமாக இருந்துள்ளது. ஒரு களஞ்சி தங்கம் என்பது அரைப்பவுனைவிடச் சிறிதளவு அதிகரித்த தங்கத்திற்குச் சமனாகும்.[59]





Fig. 3: Prompt Dower and Deffed Dower

ஆய்வுப் பிரதேசத்தைப் பொருத்தமட்டில் மஹரானது பணமாக, தங்கமாக மாத்திரம் வழங்கப்படுகின்றது. மஹர் தொகையானது ரூபாய் 500 தொடக்கம் 400,000 வரை கொடுக்கப்பட்டுள்ளது. அதிகமான (35) திருமணங்களில் ரூபாய் 100,000 மேல் மஹராக வழங்கப்பட்டுள்ளது. அதிக மஹர் தொகையினை சீதனம், கல்வியறிவு, தொழில், குடும்ப அந்தஸ்து, பெண்ணின் அழகு என்பன தீர்மானிக்கின்றது. இது இஸ்லாமிய வழிகாட்டுதலுக்கு முரணானதாகும். நபி (ஸல்) அவர்கள் தெளிவாக்கினார்கள்: ஒரு பெண் அவளது அழகு, செல்வச்செழிப்பு, குடும்ப கௌரவம், மார்க்கப்பற்று என்ற நான்கு விஷயங்களுக்காக மணமுடிக்கப்படுகிறாள். மார்க்கப் பற்றுள்ள பெண்ணையே மணமுடித்து வெற்றி பெறுவீராக![60]

மேலும் பாரம்பரிய நடைமுறைகளான 51ரூபாய், 101ரூபாய், 1001ரூபாய் போன்ற நடைமுறைகளை காணமுடியவில்லை இருப்பினும் குழுக் கலந்துரையாடலின் மூலம் 1975 தொடக்கம் 1990 காலப்பகுதியில் இவ்வழக்காற்று முறை இருந்ததாக தெரிய வந்தது.





Fig.4: Measure of Dower

இங்கு இடம்பெற்ற திருமணங்களில் மஹர்களில் 60% வற்றில் 100,1000 போன்ற தொகைகள் மேலதிகமாக கொடுக்கப்பட்டதை அறியமுடிந்தது. உதாரணமாக 10100, 1001000 போன்றன. இதற்கு மார்க்கத்தில் எந்தவிதமான வழிகாட்டுதலும் கிடையாது.

ஷரீஅத் சட்டத்தைப் பொறுத்தவரையில் மஹர் குறைவாகவும் எளிதாகவும் இருக்கும் திருமணம் மிகச் சிறந்ததாகும். இதில் நபி(ஸல்) அவர்களின் வழிகாட்டுதலும் உண்டு. “உமர்(ரழி)

அவர்கள் கூறினார்கள் பெண்களுக்கு மஹர் தொகையை அளவுக்கு மீறி அதிகப்படுத்தாதீர்கள் அப்படிச் செய்வது இவ்வுலகில் புண்ணியச் செயலாகவும் மறுமையில் பயபக்தி நிலையாகவும் இருந்திருந்தால் நபி (ஸல்) அவர்கள் உங்களையெல்லாம் விட அதிக மஹர் கொடுத்திருப்பார்கள். நபியவர்கள் தம் மனைவியரில் எவருக்கும் 12

[57] அறிவிப்பு: ஸஹல் பின் ஸஅத் (ரலி) ஆதாரங்கள்: புகாரி, முஸ்லிம், அபூதாவுத், நஸயீ, தாரமி, திர்மிதி

[58] அறிவிப்பு: அனஸ் பின் மாலிக் (ரலி). ஆதாரங்கள்: புகாரி, முஸ்லிம், அபூதாவுத், நஸயீ, தாரமி..

[59] சூளனி கொடிக்கார,1999,பக்:44

[60] அறிவிப்பு: அபூஹுரைரா, அபூஸயீத் அல்-குத்ரி, ஜாபிர் (ரலி-அன்கும்), ஆதாரங்கள்: புகாரி, முஸ்லிம், அபூதாவுத், தாரமி, நஸயீ, இப்னுமாஜா.





Fig.5:Dower and Dowry

ஊக்கியாவுக்கு அதிகமாக மஹர் கொடுக்கவில்லை (ஒரு ஊக்கியா 40 வெள்ளி நாணயங்களாகும்) ஆய்வுப் பிரதேசத்தில் 39% அதிகமான திருமணங்கள் அதிக மஹர் கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் மஹர் அதிகமாகக் கொடுக்கப்பட்டுவதில் சீதனத்தின் செல்வாக்கு காணப்படுகின்றமை அவதானிக்க முடிந்தது.

## 8. மஹர்- சீதனம் (Dower and Dowry)

இஸ்லாமிய திருமணக் கோட்பாடுக்கு முற்றிலும் முரணானதே சீதனமாகும். இது இலங்கை முஸ்லிம்களின் வரலாறு நெடுகிலும் இருந்து வருகின்ற ஒரு பீடையாக காணப்படுகின்றது. இலங்கை முஸ்லிம்களின் விவாகச் சடங்குகள் பற்றி கி.பி 1888 இல் பாவா அஹ்மது குறிப்பிடும் போதும் "இலங்கை முஸ்லிம்களின் விவாகத்தில் பணமே முக்கியம் பெறுகின்றது அன்புக்கும் ஆதரவுக்கும் இடமில்லை.."[61] இக்கூற்றுக்கு ஆய்வுப்பிரதேசமும் விதிவிலக்கானதல்ல. இங்கு மஹர் தொகையானது மணமகள் வீட்டாரினால் மணமகனுக்கு வழங்கப்படும் சீதனத்தில் பெறுமதியிலேயே தங்கியுள்ளது. ஆய்வுக்குட்படுத்தப்பட்ட 250 நபர்களில் மஹர் தொகையினை நிர்ணயம் செய்வதற்கு முன் சீதனம் கணவன் வீட்டார் நிர்ணயம் செய்யப்பட்டதா? என்ற வினாவிற்கு விடையாக பெறப்பட்டதனை அருகில் உள்ள வரைபு (Fig.5:Dower and Dowry) காட்டி நிற்கின்றது.ள

## முடிவுரை (Conclusion)

மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் அடிப்படையில் ஆய்வுப்பிரதேசத்தின் மஹர் நடைமுறையானது சில விடயங்களில் இஸ்லாமிய நியமங்களுடன் இயைந்து செல்வதையும் பெரும்பாலான விடயங்களில் குறிப்பாக மஹர் நிர்ணயம், தாமதித்த மஹர் நடைமுறை, மஹரின் அளவு, மஹராக வழங்கப்படும் பொருட்கள் மற்றும் மஹர்-சீதனம் போன்றவற்றில் இஸ்லாமிய நியமங்களில் இருந்து விலகி நிற்பதை காணமுடிகின்றது. எனவே இஸ்லாம் கூறுகின்ற தூய மஹர் நடைமுறை பிரதேசத்தில் காணப்படாமையை ஆய்வின் முடிவாகக் கொள்ளப்பட்டுள்ளது.

## பரிந்துரைகள் (Recommendations)

பாலமுனை 2ம் பிரிவில் மஹர் தொடர்பான மேற்கொண்ட ஆய்வின்மூலம் இஸ்லாம் கூறுகின்ற மஹர் நடைமுறையிலிருந்து முற்றுமுழுதாக ஆய்வுப்பிரதேசத்தில் நடைமுறைப்படுத்துவதற்கு ஆய்வாளனால் பின்வரும் பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டது.

- ✓ திருமணம் தொடர்பான நிகழ்வுகளில் மார்க்க அறிஞர்களின் வழிகாட்டுதலைப் பெறல்.
- ✓ அதிகமான புத்திஜீவிகளையும் கல்விமான்களையும் உருவாக்குதல்.
- ✓ இஸ்லாமிய மஹர் தொடர்பான தெளிவினை மக்களுக்கு வழங்குதல்.
- ✓ மஹர் பெண்களின் உரிமை என்பதை தெளிவுபடுத்தும் கருத்தரங்குகளை நடத்துதல்.
- ✓ பள்ளி நிர்வாகத்தில் கல்விகற்ற மார்க்க அறிவுடைய நபர்களை உள்வாங்குதல்.
- ✓ சீதனம், கைக்கூலி, மஹர் என்பன தொடர்பான தெளிவினை வழங்கும் முகமாக மாநாடுகளை நடத்துதல்.
- ✓ திருமணப்பிரிவின் போது மஹர் வழங்க மறுப்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்தல்.

## உசாத்துணைகள் (References)

### நேர்காணல்

1. தம்ஜீத். எஸ்.எம். (2019.01.05) பள்ளி செயலாளர் பாலமுனை.
2. முசம்மில். ஏ.ஜே, (2019.01.06) பள்ளி பதிவாளர் பாலமுனை.
3. றியாஸ். கே.எல்.எம்.(2019.01.10) திருமணப்பதிவாளர் பாலமுனை.
4. றமீன்.ஏ.ஆர்.(2019.01.14) அதிபர் சஹ்வா அரபுக்கல்லூரி பாலமுனை.
5. உம்முஹபீபா. (2019.01.16) பாலமுனை.
6. நாகூர் தம்பி. (2019.10.16) பாலமுனை.

[61] அமீன். எம்.ஐ.எம். 2000. "இலங்கை முஸ்லிம்களின் வரலாறும் கலாசாரமும்" பக்-176.

7. அலியார் கே.எல. (2019.01.16) பாலமுனை.
8. இல்முநிஸா. ஏ. (2019.01.17) மாதர் சங்க தலைவி பாலமுனை.
9. அலிமா கண்டு. இ. (2019.01.20) தலைவர் மகளீர் அபிவிருத்தி சங்கம் பாலமுனை.

**நூற்கள்**

1. திருமணத்தின் சிறப்பு, அப்துல் கரீம் கே.எச் (1956), "இஸ்லாம் தந்த இன்பத் திருமணம்", குர்ஆனியா புக் டிப்போ, மதுரை
2. டாக்டர் நஜிமுதீன் எம்.எல்.(), "இஸ்லாமும் குடும்பத்திட்டமும்"
3. அப்துல் லதீப், எம்.எம்.ஏ, (2009), "விவாகம்", ஜின்னா பப்ளிகேஷன்- அக்கரைப்பற்று.
4. அமீன்.எம்.ஐ.எம்,(2000). "இலங்கை முஸ்லிம்களின் வரலாறும் கலாசாரமும் 1870-1915", அல்ஹஸனாத் பதிப்பகம், ஹெம்மதகம.
5. Siddiqi.M.I,(1994). "Family Law of Islam". S.m. shahid international Islamic bublishers- delhi-6.
6. கலாநிதி. றமீஸ் அபூபக்கர், (2018) *சமகால சமூகப் பிரச்சினைகள்.* சமூகவியல் சங்கம் சமூகவியல் துறை தென்கிழக்குப் பல்கலைக்கழகம் ஒலுவில்.

**இணையதளங்கள்**

1). அபூதல்ஹா.(2011.4.4)"முஸ்லிம் மணவாழ்க்கைச் சட்டம்" (online)
Available: http://inthiyamuslimsattam.blogspot.com (accessed):(2019.01.02).
2). Onlinetntj.com.(2011.5.10)"மஹர்(மணக் கொடை)" (online)
Available: (accessed): https://onlinetntj.com/108- (2019.01.02).
3).அப்துல் பாசித்.எம்.ஐ.(2013.01.18). "இஸ்லாம் கூறும் திருமணம்" (online)
Available:http://nidur.info/old/index.php?option=com_content&view=article&id
(accessed):(2019.01.02).